**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.335/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | ராஜலட்சுமி |
| Husband's Name | : | முத்துகிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 69 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.09.2025.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 2ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 31.10.1894 தேதிய தபசில் சொத்துக்களைப் பொறுத்து 1ம் வாதியின் தாத்தா வசந்தமுத்து நாயுடு பெயரில் ஏற்பட்டுள்ள பதிவு பெற்ற செட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 2020-2021 காலத்திற்கான 1ம் தபசில்சொத்திலுள்ள வீட்டிற்கு 1ம் வாதி பெயரில் வரி விதிப்பு ஏற்பட்டு வாதி தீர்வை செலுத்தியதற்கான வீட்டு ரசீது அசல் (எண்ணம்-1) வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் தபசில் சொத்திலுள்ள வீட்டிற்கு 1ம் வாதியின் தகப்பனார் சங்கரப்ப நாயுடு பெயரில் மின்இணைப்பு ஏற்பட்டதற்கான மின்கட்டண ரசீது அசல்(எண்ணம்–1) வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 17.09.2020 தேதிய 1ம் வாதி தென்காசி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு கை நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. அ.வ.எண்.191/2002 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தபசில் சொத்துக்களை காட்டக்கூடிய ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 12.01.2004 தேதியில் அ.வ.எண்.191/2002 வழக்கில் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தகப்பனார் சுப்பையா என்ற மோகன் அளித்துள்ள சாட்சியம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. தபசில் சொத்துக்களுக்கான மாதிரி வரைபடம் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 17.09.1950 தேதிய 1,2 பிரதிவாதிகளின் தாத்தா ராமசாமி நாயுடு பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.